# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 02 வெள்ளிக்கிழமை 18.07.2025 கதிர் 258



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு-
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel



# தையிட்டி விகாரைப் பிரச்சினை: மிக விரைவில் தீர்வு காணப்படும்!

## அமைச்சர் சந்திரசேகர் உறுதி



**யாழ்ப்பாணம், ஜூலை 18**

**யாழ். தையிட்டி திஸ்ஸ விகாரைப் பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வு கிடைக்கும் என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.**

**தையிட்டிப் பகுதியில் அமைந்துள்ள திஸ்ஸ விகாரைக்கு நேற்று வியாழக்கிழமை மாலை வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் மற்றும் சபை உறுப்பினர்கள் நேரில் விஜயம் மேற்கொண்டனர்.**

இதன்போது அந்தப் பகுதியில் கட்டடம் ஒன்றை அமைப்பதற்காக கிடங்கு வெட்டப்பட்டிருந்த நிலை காணப்பட்டது என்று வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் குறிப்பிட்டார்.

அதேவேளையில், கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் உள்ளிட்ட பலரும் தையிட்டி திஸ்ஸ விகாரைப் பிரதேசத்துக்கு விஜயம் செய்தனர்.

இதன்போது அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில், ''தையிட்டி திஸ்ஸ விகாரைப் பிரச்சினைக்கு மிக விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும்.' – என்று தெரிவித்தார்.

தனித்தனி விஜயமாக வந்திருந்த இரண்டு குழுவினரும் விகாரை வளாகத்தில் சந்தித்துப் பல முக்கிய விடயங்கள் தொடர்பாகப் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.

## சந்திரசேனவுக்கு மறியல் நீடிப்பு



கொழும்பு, ஜூலை 18

முன்னாள் அமைச்சர் எஸ். எம். சந்திரசேனவை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி

7➤

## யாழில் ஹெரோயினுடன் மூன்று இளைஞர்கள் கைது



யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணத்தில் உயிர்கொல்லி போதைப்பொருளுடன் மூன்று இளைஞர்கள் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருநகர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய

7➤

## முன்னாள் அமைச்சர் ராஜிதவின் முன் பிணை மனு இன்று நிராகரிப்பு



கொழும்பு, ஜூலை 18

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் தன்னைக் கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் தாக்கல் செய்யப்பட்ட முன் பிணை மனுவை நிராகரித்து கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி இன்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

7➤

## செம்மணிப் புதைகுழிக்கு நீதி வேண்டி யாழில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு துரித நீதி வேண்டும் என வலியுறுத்தி யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அகில இலங்கை மக்கள் எழுச்சிக் கட்சியின்

7➤

**- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -**

# சமூக மேம்பாட்டுக்காக நடவடிக்கை எடுப்பேன்



கொழும்பு, ஜூலை 18

அரசாங்க விவகாரங்களில் மகா சங்கத்தினரின் தொடர்ச்சியான வழிகாட்டல்களை எதிர்பார்ப்பதாகவும், தேசிய, மத மற்றும் சமூக மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை பின்வாங்காமல் செயற்படுத்துவதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மல்வத்து - அஸ்கிரி உபய மகா விகாரையின் அனுநாயக்க தேரர் உட்பட நிர்வாக சபை நாயக்க தேரர்களுடன் நேற்று பிற்பகல் கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். மல்வத்து - அஸ்கிரி மகா நாயக்க தேரர்களின் அனுசாசனைக்கு அமைவாக மத, தேசிய மற்றும் சமூகம் சார்ந்த விசேட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதே இதன் நோக்கமாகும். பௌத்த சாசன விடயங்களில்எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்க்க, பௌத்த விகாரை தேவாலகம் சட்டம், போன்ற பல்வேறு சட்டங்களில் சரியான நேரத்தில் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்தும் மற்றும் பிக்குமார்களுக்கான கல்வி தொடர்பாகவும் மகா சங்கத்தினர் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். தற்போதைய சவால்களை அடையாளம் கண்டு, மத விழுமியங்கள் மற்றும் கலாசாரத்தைப் பாதுகாக்க அரசாங்கம் முன்வந்து ஒரு வேலைத்திட்டத்தை வகுப்பதன் முக்கியத்துவம் மற்றும் பௌத்த சாசனப் பிரச்சினைகளுக்காகவும் பௌத்த சாசன முன்னேற்றத்திற்காகவும் அரசாங்கத்தின் பங்களிப்பைப் பற்றி கலந்துரையாடுவதற்கு புத்தசாசன செயற்பாட்டு ஆலோசனைக் குழுவொன்றை நிறுவுவதன் முக்கியத்துவம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

பௌத்த சாசன ரீதியாக நிலவும் பல்வேறு சவால்கள் மற்றும் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை உடனடியாகத் தயாரிக்குமாறும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட துறைகளுக்குப் பணிப்புரை விடுத்தார். (ஐ)

# ரயிலில் மோதி காட்டு யானை பலி

கொழும்பு, ஜூலை 18

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற ரயிலில் இன்று அதிகாலை காட்டு யானை ஒன்று மோதியுள்ளது.

கல்லெல்ல பகுதியில் அதிகாலை 5:30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் அந்த யானை உயிரிழந்ததாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

இந்த காட்டு யானை அப்பகுதியில் உள்ள நெல் களஞ்சியசாலைகளை உடைத்து அவற்றினுள் நுழைந்து நெல்லை உணவாக உட்கொள்வதாகவும், இன்று அதிகாலை 3.00 மணி முதலே காட்டு யானை கிராமத்தில் சுற்றித் திரிந்ததாகவும் பிரதேசவாசி ஒருவர் தெரிவித்தார்.

காட்டு யானை கிராமத்திற்குள் நுழைந்த போது வனவிலங்குத் திணைக்களத்திற்கு தகவல் வழங்க கிராம மக்கள் நடவடிக்கை எடுத்திருந்தாலும், அதிகாரிகள் தொலைபேசி இணைப்பை துண்டித்ததாகவும் கிராம மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

காட்டு யானை கிராமத்திற்கு அடிக்கடி வருவதாகவும், வனவிலங்குத் திணைக்களம் இது தொடர்பாக சரியான நடவடிக்கை எடுத்திருந்தால், இதுபோன்ற ஒரு துயரம் நிகழ்ந்திருக்காது என்றும் கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு இறந்த காட்டு யானை சுமார் 15 வயதான 8 அடி உயரமானது என வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ஐ)





# தேயிலை சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, நாணய மாற்றுண்டியல்கள் சட்டமூலத்திற்கு அங்கீகாரம்



கொழும்பு, ஜூலை 18

1956ஆம் ஆண்டின் 16ஆம் இலங்கை தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதிக்கான கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிக்கு அரசாங்க நிதி பற்றிய குழுவில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் (கலாநிதி) ஹர்ஷ த சில்வா தலைமையில் அண்மையில் (15) பாராளுமன்றத்தில் கூடிய போதே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இதற்கு அமைய ஒரு கிலோகிராம் தயாரிக்கப்பட்ட தேயிலைக்கு 3 ரூபா அனுமதிக் கட்டணத்தைச் செலுத்துவதற்கும், குறித்த அனுமதிக் கட்டணத்தை தேயிலை செய்கை மற்றும் தொழில்துறையின் அபிவிருத்தி, ஊக்குவிப்புக்குப் பயன்படுத்த இதன் மூலம் எதிர்பார்ப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தொகை இலங்கை தேயிலை சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள மூலதன நிதியத்தில் சேர்க்கப்படும். இதன் ஊடாக தேயிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களின் தேயிலை காணிகளின் வினைத்திறனை மேம்படுத்தவும், புதிய நடுகைகளை மேற்கொள்வதற்கும், மறுநடுகை செய்வதற்கும், கைவிடப்பட்ட தோட்டங்களில் செய்கைகளை மேற்கொள்வதை ஊக்குவிப்பதற்கும், இதன் பலனாக தேயிலைத் துறையின் வினைத்திறனை அதிகரித்து, தயாரிப்பின் தரத்தை அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும் என்றும் தேயிலை சபையின் அதிகாரிகள் மேலும் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், ஏற்றுமதி பயிரான தேயிலை மீது விதிக்கப்பட்ட செஸ் வரியால் கிடைக்கும் வருமானம் குறித்த தொழில்துறையின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படவில்லையா என குழு கேள்வியெழுப்பியது.

இருந்தபோதும், இந்தப் பணம் தமது சபையினால் பெற்றுக்கொள்ளப்படுவதில்லையென அதிகாரிகள் குழுவிடம் தெரிவித்தனர்.

ஏற்றுமதி அபிவிருத்திக்காக விதிக்கப்பட்ட செஸ் வரியால் கிடைக்கும் வருவாயை அந்தந்த தொழில்களின் மேம்பாட்டிற்குப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை குழுவின் தலைவர் வலியுறுத்தினார்.

அத்துடன், 1927ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க நாணய மாற்றுண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் காலாவதியான நிலையில் உள்ள சில பிரிவுகளை நீக்குதல் மற்றும் புதியவற்றை உள்ளடக்கும் நாணய மாற்றுண்டியல்கள் (திருத்தச்) சட்டமூலமும் குழுவில் ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

இதற்கு அமைய குறித்த கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதன் ஊடாக மோசடியான மற்றும் பிழையான காசோலைகளை வழங்குபவர்கள் தொடர்பில் குற்றவியல் பொறுப்பைச் சுமத்த உதவும் என்பதுடன், அன்றாட வணிக நடவடிக்கைகளின் போது சட்டத்திற்கு அமைய நாணய மாற்றுச்சீட்டுக்களைப் பயன்படுத்துவதை எளிதாக்குவதுடன், காசோலைகளை மின்னணு முறையில் வழங்குவதற்கான ஏற்பாடுகளை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என அதிகாரிகள் குழுவில் தெரிவித்தனர்.

அத்துடன், பாராளுமன்றத்தின் ஹன்சாட், குழு அறிக்கைகள் மற்றும் பாராளுமன்றக் கூட்ட அறிக்கைகள் தயாரிக்கும் செயற்பாட்டை நவீனமயப்படுதுதுவதற்காக, பாதுகாப்பான முன்னோடியான செயற்கைத் நுண்ணறிவு (AI) தளம் குழுவின் அனுமதியுடன் வெற்றிகரமாகப் பரீட்சார்த்தமாக முன்னெடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பிரதியமைச்சர் சதுரங்க அபேசிங்க, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்ஷன ராஜகருணா, (கலாநிதி) கௌசல்யா ஆரியரத்ன, சம்பிக ஹெட்டியாரச்சி ஆகியோர் கலந்துகொண்டதுடன், பாராளுமன்ற உறுப்பினர்களான நிமல் பளிஹேன மற்றும் விஜேசிறி பஸ்நாயக்க ஆகியோர் சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக இணைந்துகொண்டனர். (ஐ)

## இரவிலும் ஒன்பது வளைவு பாலத்தை பார்வையிட வாய்ப்பு



கொழும்பு, ஜூலை 18

எல்ல தெமோதர ஒன்பது வளைவு பாலம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதியை சுற்றுலாப் பயணிகளுக்கு கவர்ச்சிகரமானதாக மாற்றுவதற்காக ரயில்வே திணைக்களமும் மத்திய கலாச்சார நிதியமும் இணைந்து புதிய திட்டத்தை ஆரம்பித்துள்ளன.

இத்திட்டத்தின் நோக்கம், இரவு நேரத்தில் மின் விளக்குகளால் பாலத்தை ஒளிரச் செய்து, சுற்றுலாப் பயணிகளுக்கு பார்வையிடும் வாய்ப்பை வழங்குவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில்வே பொது மேலாளர் தம்மிக ஜயசுந்தர,விடம் தெரிவிக்கையில், இத்திட்டம் 2025 ஓகஸ்ட் முதல் செயல்படுத்தப்படும் என்றார்.

அவர் மேலும் கூறுகையில், “இப்பகுதி மேம்படுத்தப்பட்டு சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்பு அதிகரித்த பின்னர், பார்வையிடுவதற்கு ஒரு குறிப்பிட்ட கட்டணம் வசூலிக்கப்படும். உள்ளூர் சுற்றுலாப் பயணிகளுக்கு குறைந்தபட்ச கட்டணம் அறவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

”மேலும், நானுஓயா ரயில் நிலையத்துக்கு அருகில் ரயில் பெட்டிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட சுற்றுலா ஹோட்டல் திட்டம் குறித்தும் தம்மிக ஜயசுந்தர கருத்து தெரிவித்தார்.

“சுற்றுலாப் பயணிகளுக்கு புதுமையான அனுபவத்தை வழங்குவதற்காக இந்த ஹோட்டல் தயாரிக்கப்பட்டுள்ளது. 2025 ஓகஸ்ட் தொடக்கத்தில் இதை மேம்படுத்தி சுற்றுலாப் பயணிகளுக்குத் திறப்பதற்கு எதிர்பார்க்கிறோம்,” என்றார். (ஐ)

## திஸ்ஸ விகாரை தொடர்பாக சட்ட நடவடிக்கை - தீர்மானம் நிறைவேற்றம்



கொழும்பு, ஜூலை 18

யாழ். தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற அமர்வில், வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று பிற்பகல், பிரதேச சபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரை தொடர்பாக பிரதேச சபையால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் வன்னியசிங்கம் பிரபாகரன் ஒரு தீர்மானத்தை முன்வைத்தார்.

குறித்த தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தொடர்ந்து கருத்து தெரிவித்த வன்னியசிங்கம் பிரபாகரன், இந்த வழக்கில் பிரதேச சபையின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாக வேண்டும் என தவிசாளரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதிலளித்த தவிசாளர், குறித்த வழக்கில் பிரதேச சபையின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இலவசமாகவே பணியாற்றுவார் என சபையில் வாக்குறுதி அளித்தார்.

(ஐ)

## ஆள்மாறாட்டம் செய்து நிதி மோசடி ஐரோப்பிய ஒன்றியம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 18

ஐரோப்பிய ஒன்றிய அதிகாரியாக ஆள்மாறாட்டம் செய்யும் ஒருவர், மானியங்கள் மற்றும் நிதி உதவிகளை வழங்குவதாகக் கூறி, மோசடியில் ஈடுபட்டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிவிப்பில், சம்பந்தப்பட்டவர் இளம் தொழில்முனைவோரை அணுகி, ஐரோப்பிய ஒன்றிய மானியங்கள் அல்லது நிதி வாய்ப்புகளை வழங்குவதாகக் கூறிவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தவறான வாக்குறுதிகளின் அடிப்படையில் பணம் செலுத்துமாறு, அவர்களைக் குறித்த மோசடி செய்பவர் கோரியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

நிதியுதவியை எளிதாக்க மூன்றாம் தரப்பு முகவர்களை ஈடுபடுத்துவதில்லை என்றும், மானிய விண்ணப்பங்கள் அல்லது கொள்முதல் கேள்விப்பத்திரங்களைச் செயலாக்குவதற்கு தனி ஆட்கள் அல்லது அமைப்புகளிடமிருந்து பணம் கோருவதில்லை என்றும் ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தநிலையில் பொதுமக்கள் இந்த விடயத்தில் விழிப்பாகச் செயற்படுமாறு ஐரோப்பிய ஒன்றியம் கோரியுள்ளது. (ஐ)

# தமிழ்நாடு நாள் தமிழ்கூறு நல்லுலகின் வரலாற்றில் தனிப்பெரும் நாள்






1956 ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் தேதி இந்தியா முழுவதும் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அதன் அடிப்படையில் அப்போதைய மெட்ராஸ் மாகாணத்திலிருந்து ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளத்தின் சில பகுதிகள் பிரிந்து சென்றன. மதராஸ் மாநிலம், தமிழ்நாடு என பெயர் மாற்றம் பெற்றது 1969 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது. இது அண்ணாதுரை முதலமைச்சராக இருந்தபோது நிகழ்ந்தது.

1969-க்கு முன், அந்த மாநிலம் மதராஸ் மாநிலம் என்று அழைக்கப்பட்டது. பின்னர், 1969-ல், அந்த மாநிலத்தின் பெயர் அதிகாரப்பூர்வமாக தமிழ்நாடு என மாற்றப்பட்டது. தமிழ்நாடு தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடுநாள் தமிழ்கூறு நல்லுலகின் வரலாற்றில் தனிப்பெரும் நாள். ஜூலை 18, 1967: தி.மு.க. எனும் இயக்கம் ஆட்சிப் பொறுப்பேற்றதால் இம்மண்ணின் முகவரியின் முதல் வரியே மாற்றம் பெற்றது. தமிழ்நாடு என்ற நம் உண்மைப் பெயரை அதிகாரப்பூர்வமாகப் பெற்று, ஆண்டாண்டு காலமாய் நெஞ்சில் சுமந்த கனவு நனவான நாள்.

அதுவரை இல்லாத சிறப்பாய்த் தாய்நிலத்துக்குத் தலைமகன் பேரறிஞர் அண்ணா பெயர்சூட்டி 'தமிழ்நாடு தமிழ்நாடு தமிழ்நாடு' என மூன்று முறை பேரவையில் முழங்க, மேசையொலிகள் விண்ணதிர்ந்த இந்நாள்தான் தமிழ்நாடுநாள்

மெட்ராஸ் மாகாணம்' என்றிருந்த நம்முடைய மாநிலத்திற்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையிலான தி.மு.கழக அரசு 'தமிழ்நாடு' என்று பெயர்ச்சூட்டிய வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாள் இன்று!

ஒட்டுமொத்த தமிழர்களின் நீண்ட நாள் கோரிக்கையை 1967இல் முதன்முதலில் ஆட்சிக்கு வந்த கழக அரசு நிறைவேற்றியத் திருநாள். தமிழ்நாடு' என்று அண்ணா அவர்கள் மும்முறை முழங்க, 'வாழ்க' என்ற உறுப்பினர்களின் வாழ்த்து ஒலியால் சட்டமன்றமே உணர்ச்சிப் பெருக்கால் தத்தளித்தது.

"தமிழ்த் தாயின் நெஞ்சங் குளிர்ந்திடத்தக்க தீர்மானத்தை நிறைவேற்றி விட்டோம் என்கிற பூரிப்பு எல்லா உறுப்பினர்களின் உள்ளத்திலும்" என்று எழுதினார் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டின் பெயரையே மாற்றத் துடிக்கும் ஆதிக்கக் கூட்டத்தின் சதியை, அண்ணா- கலைஞர் வழிநின்று நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முறியடித்தார்

நம் தலைவர்கள் போராடி மீட்டுத் தந்த தமிழ்நாட்டின் உரிமைகளை டெல்லிக்கு காவு கொடுக்க கிளம்பியிருக்கும் பாசிசத்தின் பல்லாக்குத் தூக்கிகளை வீழ்த்துவோம். தமிழ்நாட்டின் மண், மொழி, மானத்தை குலைக்க நினைக்கும் எதிரிகளையும், துரோகிகளையும் ஓரணியில் நின்று விரட்டியடிக்க தமிழ்நாடு நாளில் உறுதி ஏற்போம்! தமிழ் வெல்க! தமிழ்நாடு வாழ்க!! (ஐ)

## 2026ல் அதிமுக தனித்தே ஆட்சி அமைக்கும்: எடப்பாடி பழனிசாமி மீண்டும் திட்டவட்டம்



2026ல் அதிமுக தனித்தே ஆட்சி அமைக்கும் என்று எடப்பாடி பழனிசாமி மீண்டும்திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆங்கில நாளிதழுக்கு பேட்டி அளித்தார். அப்போது, தவெக தலைவர் விஜய் உடன் கூட்டணி பேச்சுவார்த்தையில் உள்ளீர்களா? என்ற கேள்விக்கு, "தேர்தல் உத்திகளை தற்போது வெளியில் கூற முடியாது" என றார். (ஐ)



## ஸ்ரீபெரும்புதூர் ஆலையை விரிவாக்கம் செய்ய சியட் டயர் நிறுவனம் ரூ.450 கோடி முதலீடு திட்டம்

ஸ்ரீபெரும்புதூர் ஆலையை விரிவாக்கம் செய்ய சியட் டயர் நிறுவனம் ரூ.450 கோடி முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது. ஸ்ரீபெரும்புதூர் ஆலையில் ஆண்டுக்கு தற்போது 70 லட்சம் டயர்கள் உற்பத்தியாகின்றன. ஸ்ரீபெரும்புதூர் ஆலையை விரி வாக்கம் செய்து உற்பத்தியை அதிகரிக்க சியட் டயர் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. (ஐ)

## சர்வதேச விண்வெளியிலிருந்து பூமிக்கு திரும்பிய சுபான்சு சுக்லா



சர்வதேச விண்வெளி பயணத்தை முடித்து கொண்டு திரும்பிய விண்வெளி வீரர் சுபான்சு சுக்லா இயல்பு வாழ்க்கைக்கு திரும்பி வருகிறார். ஆக்சியம்-4 விண்வெளி திட்டத்தில் இந்திய விண்வெளி வீரர் சுபான்சு சுக்லா, நாசாவின் முன்னாள் விண்வெளி வீரர் பெக்கி விட்சன், போலந்து விண்வெளி வீரர் ஸ்லாவோஸ் உஸ்னான்ஸ்கி மற்றும் ஹங்கேரி விண்வெளி வீரர் திபோர் கபு ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இவர்கள் நான்கு பேரும் 18 நாள்கள் விண்வெளியில் தங்கி இருந்து ஆய்வுகளை மேற்கொண்டனர். இதைத்தொடர்ந்து கடந்த 16ம்தேதி சுபான்சு சுக்லா உள்ளிட்ட நால்வரும் பத்திரமாக கலிபோர்னியாவில் தரையிறங்கினர்.

சுபான்சு சுக்லா தற்போது அமெரிக்காவின் ஹூஸ்டனில் தங்கி உள்ளார். சுபான்சு சுக்லாவின் மனைவி கம்னா சுக்லாவும், அவரது மகனும் ஏற்கனவே ஹூஸ்டனில் தங்கி உள்ளனர். அவர்களை சந்தித்த சுபான்சு சுக்லா இருவரையும் கட்டி, அணைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இதுகுறித்து ஹூஸ்டனில் நிருபர்களிடம் பேசிய கம்னா சுக்லா, "என் கணவர் பத்திரமாக பூமிக்கு திரும்பிவிட்டார். மகனுடன் சென்று அவரை சந்தித்தேன். நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறோம்" என உற்சாகமாக தெரிவித்தார்.

இந்நிலையில் சுபான்சு சுக்லாவின் தந்தை ஷம்பு தயாள் நேற்று லக்னோவில் அளித்த பேட்டியில், "மூன்றுவாரங்களாக புவி ஈர்ப்பு விசையற்ற சூழலில் இருந்த சுபான்சு சுக்லாவுக்கு 7 நாள் மறுவாழ்வு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர் மெல்ல, மெல்ல பூமி சூழலுக்கு திரும்பி வருகிறார். நாங்கள் அவருடன் தொலைபேசியில் பேசியபோது, நாட்டுக்கு பெருமை சேர்த்த தருணத்தை நினைத்து மகிழ்ச்சியாக இருப்பதாக சுக்லா தெரிவித்தார்.

சுபான்சுவின் சாதனைக்கு பொதுமக்கள் பெரும் வரவேற்பு அளித்ததை பார்த்து நாங்கள் மிகவும் மகிழ்ச்சியில் உள்ளோம். அவரை வரவேற்க நாங்களும், லக்னோ மக்களும் ஆவலுடன் காத்திருக்கிறோம்" என தெரிவித்தார்.

'அடுத்த விண்வெளி வீரர் இந்திய விண்கலத்தில் பறப்பார்'

ஒன்றிய அமைச்சர் ஜிதேந்திர சிங் கூறுகையில், "சுபான்சு சுக்லாவின் விண்வெளி பயணம் இந்தியாவின் ககன்யான் உள்ளிட்ட திட்டங்களுக்கான மதிப்புமிக்க நுண்ணறிவையும், அனுபவத்தையும், இந்தியாவின் எதிர்கால விண்வெளி பயணங்களுக்கு ஒரு நிபுணத்துவத்தையும் அளித்துள்ளது. இந்தியாவின் அடுத்த விண்வெளி திட்டம் முற்றிலும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டதாக இருக்கும். அடுத்த இந்திய விண்வெளி வீரர் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட விண்கலத்தில் பயணிப்பார். இது இந்தியாவின்மதிப்பை உயர்த்துவதுடன், நமது சொந்த விண்வெளி நிலையத்தை அமைப்பது உள்ளிட்ட எதிர்கால திட்டங்களுக்கு சிறந்த வழிவகுக்கும்" என்று கூறினார். (ஐ)

# கடல்



கடற்கரை காற்று தலை முடியைக் கலைத்துக் கொண்டிருந்தது. கடற்கரை மனதின் சுமைகளை இறக்கி வைக்கும் ஒரு இடமாகத்தான் எனக்கு எப்போதும் இருக்கிறது. கடலை நெருங்கும் போதே " ஹோ " என்று பரந்து விரிந்து கிடக்கும் மண்ணை பார்க்கும் போதே ஒரு வித சந்தோசம் உள்ளுக்குள் விசிலடிக்கத் தொடங்கி விடும்.

பெரும்பாலும் கடற்கரைக்கு யாரோடும் நான் வருவதில்லை. கடலே துணை, கரையே எனக்கு இணை பிறகெதற்கு ஒரு துணை. கால் நீட்டி கடற்கரை மணலில் அமந்து கொண்டு இரைச்சலாய் கரையை நோக்கி வந்து பிறகு திரும்பும் அலைகளையும், பரந்து விரிந்த வானத்தையும் அதில் மிதக்கும் மேகங்களையும் பார்த்துக் கொண்டு வெறுமனே அமர்ந்திருத்தல் சுகம். எந்த எண்ணமுமற்று அந்த சூழலில் கரைந்து கிடப்பது தவம். நிறைய பேர் ஒவ்வொரு காரணத்திற்காக கடற்கரைக்கு வருகிறார்கள். கூட்டம் கூட்டமாய் வந்து அமர்ந்து உணவருந்துகிறார்கள். பேசிச் சிரிக்கிறார்கள். ஓடிப்பிடித்து விளையாடுகிறார்கள். பட்டம் விடுகிறார்கள். குதிரை சவாரி செய்கிறார்கள். அனுமதிக்கப்பட்ட பகுதிவரை கடலில் சென்று குளிக்கிறார்கள். கடலில் கால் நனைத்து சிலாகித்துப் போகிறார்கள்.

கடற்கரையில்வியாபாரம்செய்யும்சிறுதொழிலாளர்களுக்கு கடற்கரை எந்த வித உணர்வையும்கொடுத்து விடுவதில்லை. அவர்கள் பிழைப்புக்கான ஒரு இடம் என்ற அளவோடு கடல் அங்கே சவலைப் பிள்ளையாய் சுருங்கிப் போய்விடுகிறது. காதலர்களுக்கு ஒரு விதமாகவும், காவலர்களுக்கு ஒரு விதமாகவும், திருடர்களுக்கு ஒருவிதமாகவும் கடல்..... வெவ்வேறு முகத்தைக் காட்டுகிறது. உண்மையில் சொல்லப் போனால் உலகத்தில் இருக்கும் எல்லா விசயங்களுமே அப்படித்தான். எப்படி எடுத்துக் கொள்கிறோமோ அப்படியான செய்தியை நமக்குச் சொல்கிறது. வெளியே ஒரு செய்தியும் இங்கே கிடையாது. ஒரு மனிதரோ, சூழலோ, இடமோ எப்போதும் நமக்குள் மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியாது. வேண்டுமென்றால் தாக்கத்தை உண்டு பண்ணலாம். அப்போது கூட வாங்கும் தன்மையைப் பொறுத்துதான் விளைவுகள் ஏற்படுகின்றன. அடிப்படையில் பலவிதமான அபிப்ராயங்களை நமது அனுபவங்களின் மூலம் ஆழ்மனது கிரகித்து வைத்துக் கொண்டு அதற்கு ஏற்றார் போல நம்மை சிந்திக்கச் சொல்கிறது. நாம் நம் சுயவிருப்பு விருப்போடுதான் விசயங்களை எப்போதும் அணுகிக் கொண்டிருக்கிறோம். எந்த ஒரு பொருளுக்கும் இருக்கும் தனித்தன்மையைப் பற்றி நாம் கவலைகள் கொள்வது கிடையாது. எனக்கு இது இப்படி வேண்டும் என்ற ஒரு விருப்பத்தோடுதான் இங்கே எல்லா பரிமாறுதல்களுமே நிகழ்கின்றன. நான் மாலை வேளையில் கடற்கரை வருவது என்பது எதையோ வாங்கிச் செல்ல அல்ல, எதையோ பார்த்து செல்ல அல்ல, எதைப்பற்றியோ யோசித்து செல்லவும் அல்ல... கடல் ஒரு பிரம்மாண்டம். கடலைத் தொட்டு நிற்கும் வானம் ஒரு பிரம்மாண்டம். கடலை ஒட்டிப்பரந்து விரிந்து கிடக்கும் கடற்கரை ஒரு பிரம்மாண்டம். இதற்கு நடுவில் அபிப்பிராயமற்று வெறுமனே அமர்ந்திருத்தலோ அல்லது நடத்தலோ அல்லது நின்று கொண்டிருத்தலோ ஒருவித சுகம். கடலை நான் பார்க்கும் போதெல்லாம் அது ஏதோ ஒரு ரகசியத்தை தன்னுள் தேக்கி வைத்திருப்பதாகவே நினைத்துக் கொள்வேன். ஒவ்வொரு முறையும் அலைகள் கரைக்கு வரும் போதும் அவை என்னிடம் ஏதோ சொல்ல முயல்வதாக உணர்வேன்...! இந்த அலை சொல்லவில்லை...அடுத்த அலை சொல்லுமா? இல்லை அடுத்தது சொல்லுமா என்று ஏக்கமாய் கடற்கரையில் நின்று காத்திருந்திருக்கிறேன்.



என்ன இது ஒரு அலையும் நமக்கு ஒன்றும் சொல்லவில்லையே என்று யோசித்து கவலைப்பட்ட நான், பின்னொரு நாளில் புரிந்து கொண்டேன் எல்லா அலைகளுமே என்னிடம் மௌனத்தை பகிர்ந்து சென்றன என்று...! ஆழ்கடல் சலனமில்லாமல் இருக்கும் என்றாலும் ஆழ்கடலில் தோன்றும் சலனமே பயணித்து அலைகளாக கரைகளை மோதுகின்றன. ஒரு ஏற்றம் ஒரு இறக்கம் என்று தொடர்ச்சியாய் பயணித்து கரையைத் தொட்டு பிறகு வெறுமனே திரும்பிச் செல்லும் அலைகளுக்கும் வாழ்க்கைக்கும் நிறையவே தொடர்பிருக்கிறது.

ஆர்ப்பாட்டமாய் ஏதோ ஒரு இலட்சியத்துக்காகவே எல்லோரும் பயணிக்கிறோம். பயணத்தின் ஆரம்பம் வெகு சுவாரஸ்யமானது அல்ல. அது போல இறுதியும் வெகு சுவாரஸ்யமானது அல்ல. ரத்தமும், சதையும் இன்ன பிற வேண்டாத பல கழிவுகளுடன் தான் மனிதன் பிறக்கிறான். இன்னும் சொல்லப் போனால் அசுத்தம் வேறு ஒரு நிலைக்கு மாறிக் கொள்வதுதான் மானுடப் பிறப்பே.....

இந்த பூமியில் ஜனித்து மரித்த அல்லது வாழ்ந்து கொண்டிருக்கிற யாராவது யாரிடமாவது கேட்டுப் பெற்றோமா எனக்கு இந்தப் பிறப்பு வேண்டுமென்று..? அது திட்டமிடாமல் தன்னிச்சையாய் நிகழ்ந்தது. உயிர் உருவாவதே சாத்தியக்கூறுகளினால்தான். மொத்த வாழ்க்கையும் சாத்தியக் கூறுகளால் கட்டியமைக்கப்பட்டதே. எது வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் இங்கே நிகழலாம். எதேச்சையாய் நான் இங்கே வந்தவன். இங்கே எனக்கு எதற்கு பிணக்குகளும், இணக்கங்களும், துக்கங்களும் சந்தோசங்களும் வேண்டும்....?

இதே கடற்கரை எனக்கு பல சூழல்களை கடந்த காலத்தில் கொடுத்திருக்கிறது. ஒரு சுனாமி தினத்தன்று...இங்கே பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கை சூறையாடப்பட்டது. சுனாமி வந்த அந்த அதிகாலையில் இந்தக் கடலின் அலைகள் எல்லாம் ஊமையாகிப் போய் மனித ஓலங்களால் நிரம்பிக் கிடந்தது. வாழ்க்கையை எது கொடுத்ததோ அதுவே எடுத்தும் கொண்டது. கடலை அன்று திட்டாத மனிதர்கள் கிடையாது. கடல் மாதா என்று சொல்லி கையெடுத்துக் கும்பிட்டவர்கள் எல்லாம் சனியனே என்று சாடினார்கள். சுனாமிக்குப் பிறகு மறுநாள் கடல் ஒன்றும் தெரியாதது போல சலனமில்லாமல் படுத்துக் கிடந்தது. அலைகள் எல்லாம் எந்த வித குற்ற உணர்ச்சியுமின்றி கரைகளில் விளையாடிக் கொண்டிருந்தன.

பின்னொரு நாள்...என் காதலியை நான் சந்தித்ததும் பிரிந்ததும் இதே கடற்கரையில்தான். எதிர்ப்பாராமல் சந்தித்தோம். பல நாட்கள் வெகுதூரம் நடந்தோம். ப்ரியமானவைகள் பற்றி பட்டியலிட்டுக் கொண்டோம். கடவுள் தேடலில் கைகோர்த்துக் கொண்டோம். அவளை சகி என்றேன்.....என்னை அவள் பதி என்றாள்....! கைகோர்த்த படி கடற்கரையின் முடிவு எங்கே இருக்குமென்று தேடிக் கொண்டு வெகு நேரம் நடந்து கொண்டே வாழ்க்கையை கால்களால் அளந்தோம். கவிதைகள் சொல்வேன்... அவள் கனவுகளைச் சொல்வாள்.....கற்பனைகளை எல்லாம் வானத்தில் எழுதி வைப்போம்.

அதிகாலையிலும், உச்சிப் பகலிலும், மாலையிலும் நடந்து, நடந்து எங்கள் காதலை கடலளவு, வானளவு என்று எண்ணிக் கொண்டிருந்தோம்....

அடிப்படையில் அவளின் விருப்ப திசை வேறு என்னுடைய திசை வேறு என்று ஒரு நாள் உணர்ந்ததை அவளிடம் சொன்னேன். சரிகளை மட்டுமா மனிதம் சுமந்து கொண்டிருக்க முடியும் அப்படியானால் அது எப்படி மனிதமாகும்? அது இயந்திரமல்லவா? என் முரண்களையும் நீ ஏற்றுக் கொள்ள வேண்டும், நான் என்பது நளினங்களின் தொகுப்பு மட்டுமல்ல நல்லவைகளின் கூட்டுமட்டுமல்ல...முட்டாள்தனமும், புரிதலின்மையும் கூட நான் தான் என்று நான் சொன்னது அவளின் முற்போக்கு மூளைக்கு பிடிபடவில்லை. நான் நிர்ப்பந்திப்பதாக அவள் நினைத்தது தவறு என்று நான் நிறுவவும் முயலவில்லை..... எங்கே ஒரே திசையில் சிறகடித்தோமோ...அங்கேயே ஒரு கணம் எங்களை எதிர் எதிர் திசையில் சிறகடிக்க வைத்தது.

தெளி விசும்பினில்
கலை மேகமென
நாங்கள் தொலைந்து போனோம்!
செய்கவிதையின் படுபொருளென
அவளைக் கண்ட பொழுதினில்
அவள் மறைந்து போனாள்.....!
இந்தக் கடற்கரையில்தான்....அது நிகழ்ந்தது.

உறவினர் ஒருவர் இறந்து போக அவரின் அஸ்தியைச் சுமந்து வந்து கரைத்தது இந்தக் கடலில்தான். கடல் எனக்கு எல்லாமாய் இருந்தது. இருக்கிறது. நான் கடல் நிஜம் நிலம் பொய் என்று நம்புபவன். எது மிகையோ அதுவே பொருளின் தன்மை. இந்த பூமி கடலுக்குச் சொந்தமானது. பரந்து விரிந்த இந்த வாழ்க்கையை உணர்வுப் பூர்வமாய் அணுகும் போது கடல், வான், மண், மலை, செடி, கொடி, என்று எத்தனையோ விசயங்கள் நம்மை இந்த வாழ்க்கைச் சுழற்சியை விட்டு வெளியே இழுத்துச் சென்று பிரபஞ்சத்தின் அதி நுட்பமான சூட்சுமத்தோடு இணைத்து விடுகின்றன. தத்துவங்களையும் கோட்பாடுகளையும் சித்தாந்தங்களையும் சுமந்து கொண்டு ஒரு கூலியைப் போல வாழும் வாழ்க்கை அங்கே முற்றுப் பெற்று விடச் செய்கிறது.

கடவுள் தேடல் என்பது எதையும் தேடாதிருத்தல் என்ற தெளிவினை அடையும் போது மொத்த பூமி மட்டுமில்லாது பிரபஞ்சமே நமது வசப்பட்டுப் போகிறது. பசி, கோபம், காமம் என்ற தலையாய உணர்வுகளை சுற்றி அதன் அடிப்படையில் தத்தமது வசதிகளை விஸ்தாரித்துக் கொள்ளும் ஒரு இயந்திர வாழ்க்கையை விட்டு சட்டென்று வெளியேறி சலனமில்லாத பேருண்மைக்கு செல்ல கடல் போன்ற பூமியின் நம்மெதிர்ப்படு பிரம்மாண்டங்களுக்குள் நாம் கரைந்து போகவேண்டி இருக்கிறது.

சுனாமியாய் வெளிப்பட்டு இந்த பூமி வாழ் மனிதர்களை சுக்குநூறாக்கிய கடல்தான் யுகங்களாய் பெரும் மௌனத்தில் தன்னை ஆழ்த்திக் கொண்டு கரைகளில் மோதி மோதி சிரித்துக் கொண்டிருக்கிறது. சுனாமியாய் சூறையாடவும், பேரமைதியாய் சலனமற்று இருக்கவும் கடலுக்குத் தெரியும். கடலை மனிதர்கள் வெறுக்கலாம்....அதை ஆபத்தின் அறிகுறியாய் புயற்காலங்களில் அடையாளப்படுத்தியும் கொள்ளலாம்.....அல்லது கடலினால் கிடைக்கும் நன்மைகளைப் பட்டியலிட்டபடியே இந்த பூமிப் பந்து எங்கும் ஆழ் கருநீலத்தில் படுத்துக் கிடக்கும் அதன் மௌனத்தை போற்றவும் செய்யலாம்....

ஆனால் கடலுக்கு அது பற்றியெல்லாம் ஒரு கவலையும் இல்லை. எப்படிப் பார்த்தாலும் கடல் கடலாகவே இருக்கிறது. நேர் எதிர் கலவையான வாழ்க்கையில் அறிவைக் கொண்டு பயணிக்கும் மனிதர்களுக்கு கடலைப் போன்ற ஆழம் கொண்ட கரிக்கும் உப்பு மனிதர்களைப் பற்றி தெரிவதில்லை. இரண்டும் இரண்டும் நான்கு என்ற கணக்குகளுக்கும் ஆன்ம தெளிவுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. மனிதர்கள் ஜனிக்கிறார்கள் .... மரிக்கிறார்கள். இடையில் ஏதேதோ பேசுகிறார்கள்.... அவ்வளவுதான் வாழ்க்கை. காதலும் காமமும், கடவுளும் இந்த பூமிப்பந்தின் தீர்க்க முடியாத ரகசியங்கள்.. அப்படித்தான் கடலும். இந்த ரகசியங்களை அறிய முயல்தல் என்பது அறியாமை. அறிந்தேன் என்பது மடமை. இந்த பூமியில் வாழும் அத்தனை ஜீவராசிகளுக்குள்ளும் சமுத்திரத்தின் கரிப்புத்தன்மை கரைந்து கிடக்கிறது. கரிப்புச் சுவை உணர்வோடு தொடர்புடையது....கரிக்கும் மனிதர்கள் கடலைப் போன்ற பெருங்குணம் கொண்டவர்கள்....

கடற்காற்றில் நான் அமர்ந்திருந்தேன். நிலவு கடலுக்கு மேலிருந்து ஏ...லே...லோ ஜலசா என்று பாடிக் கொண்டிருந்தது...அலைகள்....காற்றின் வேகத்திற்கு ஏற்றார் போல ஹோ....என்ற பேரிரைச்சலோடு கரையை மோதிக் கொண்டிருந்தன.

பலர் அந்தக் கடற்கரையில் பல்வேறு காரணங்களுக்காய் அலைந்து கொண்டிருந்தனர்.

நான் கடலை பார்த்துக் கொண்டிருந்தேன்.....கடல் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தது...!



## ட்ரம்பிற்கு ஏற்பட்டுள்ள நோய் வெள்ளை மாளிகை தகவல்

அதிபர் ட்ரம்ப் காலில் ஏற்பட்ட வீக்கத்தை பரிசோதித்ததில் அவருக்கு **'CHRONIC VENOUS INSUFFICIENCY'**| எனப்படும் நரம்பு நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்நோய், உலகளவில் 20ல் ஒருவரை பாதிக்கும் எனவும், கால்களில் இருந்து இதயத்திற்கு ரத்தம் சரியாக திரும்பாததால் ஏற்படுவதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். **CHRONIC VENOUS INSUFFICIENCY** என்பது நரம்புகளில் ரத்தம் தேங்கி, நரம்பு சுவர்களில் அழுத்தம் மற்றும் வீக்கம் அதிகரிப்பதற்கு வழிவகுக்கும் ஒரு நிலை உள்ளது. (ஐ)



## ரிலீசுக்கு ஒரு வருடத்துக்கு முன்பே கிறிஸ்டோபர் நோலனின் பட டிக்கெட்டுகள் 'காலி'

*அடுத்த ஆண்டு திரைக்கு வரும் கிறிஸ்டோபர் நோலனின் படத்துக்கான டிக்கெட்டுகள் இப்போதே விற்றுத் தீர்ந்துள்ளன. அமெரிக்காவின் முதல் அணுசக்தி ஆயுதத்தை உருவாக்கிய அமெரிக்க அணுசக்தி விஞ்ஞானி ஜே.ராபர்ட் ஓப்பன்ஹெய்மர் வாழ்க்கை சம்பவங்களை மையமாக வைத்து 'ஓப்பன்ஹெய்மர்' என்ற படத்தை இயக்கியவர், கிறிஸ்டோபர் நோலன். அவரது ஹஇன்டர்ஸ்டெல்லர்', ஹஇன்செப்ஷன்', ஹடெனட்' ஆகிய படங்களுக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் இருக்கின்றனர். ஹதி டார்க் நைட் டிரைலாஜி', ஹதி பிரஸ்டீஜ்' ஆகிய படங்களையும் இயக்கி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தார்.*

*டிஜிட்டல், 3டி, கிராபிக்ஸ்போன்ற அதீத தொழில்நுட்பங்களை விரும்பாத அவர், ஹஇன்செப்ஷன்' படத்தின் தயாரிப்பாளர்கள் படத்தை மீண்டும் 3டியில் ரிலீஸ் செய்ய கேட்டபோது மறுத்துவிட்டார். இந்நிலையில், கிறிஸ்டோபர் நோலன் இயக்கத்தில் அடுத்த வருடம் ஜூலை 17ம் திரைக்கு வரும் படம், 'தி ஒடிஸி'. மெட் டாமன் ஹீரோவாக நடித்துள்ள இப்படம் திரைக்கு வரவிருக்கும் நிலையில், அதன் டிக்கெட்டுகள் இப்போதே விற்று தீர்ந்துவிட்டது. இதுவரை ஒரு வருடத்துக்கு முன்பாக எந்த படத்துக்கும் டிக்கெட் ரிசர்வேஷன் நடந்தது கிடையாது. முதல் முறையாக இந்த படத்துக்கு தான் இதுபோல் நடந்துள்ளது. இதை தயாரிப்பு நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. முதல் ஒரு வாரத்துக்கான டிக்கெட்டுகள் அமெரிக்காவிலுள்ள முக்கிய தியேட்டர்களில் புக் ஆகியுள்ளது. மேலும் சில நாடுகளிலும் இதுபோன்ற புக்கிங் நடந்திருக்கிறது.*

*ஹாலிவுட் படம் வெளியாக ஒரு வருடம் இருக்கும் நிலையில், இப்போதே டிக்கெட்டுகள் விற்று தீர்ந்திருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)*

## இந்தியா, ரஷ்யா உடனான உறவுக்கு சீனா ஆதரவு: அமெரிக்காவை சமாளிக்க கைகோர்க்கும் நாடுகள்



ரஷ்யா- இந்தியா - சீனா இடையிலான முத்தரப்பு உறவை புதுப்பிக்கும் முன்னெடுப்பை ரஷ்யா எடுத்துள்ளது. மூன்று நாடுகளுக்கு இடையிலான இந்த நட்புறவுக்கு முழு ஆதரவு அளிப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா – சீனா இடையிலான வர்த்தகப் போர், உலக அளவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. இதனால், அமெரிக்காவை சமாளிக்க, ரஷ்யாவுடன் சீனா நெருக்கம் காட்டி வருகிறது. மேலும் பழைய கசப்புணர்வுகளை மறந்து இந்தியாவுடனும் நட்பு பாராட்டுவதற்கான தருணத்தை சீனா எதிர்பார்த்துள்ளது.

அதற்கேற்ப கடந்த 2002ல் நிறுவப்பட்ட ஆர்.ஐ.சி., எனப்படும் ரஷ்யா- இந்தியா- சீனா முத்தரப்பு மன்றத்திற்கு புத்துயிர் அளிக்க, ரஷ்யா முனைப்பு காட்டி வருகிறது. இந்த முத்தரப்பு மன்றம் தான் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்ரிக்கா நாடுகளின் 'பிரிக்ஸ்' அமைப்புக்கு அடித்தளம் அமைத்தது.

கடைசியாக, கடந்த 2017 டிசம்பரில் இந்த மூன்று நாடுகளைச் சேர்ந்த வெளியுறவு அமைச்சர்களின் 15வது முத்தரப்பு சந்திப்பு நடந்தது. மூன்று நாடுகளும் சர்வதேச அமைதி, பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சிக்கான பங்களிப்புகளை அடையாளம் காணவும் ஆர்.ஐ.சி., வழிவகுத்தது.

ஆனால், 2019ல் வந்த கோவிட், லடாக் எல்லையில் சீன ராணுவத்தின் மோதல் மற்றும் பாகிஸ்தானுடன் நெருக்கமான உறவு ஆகிய பிரச்னைகளால், இந்திய – சீன உறவில் விரிசல் ஏற்பட்டது.

இந்நிலையில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்ற நம் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ, ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் ஆகியோருடன் பேச்சு நடத்தினார்.

இதையடுத்து, முடங்கியிருந்த மூன்று நாடுகளின் ஆர்.ஐ.சி., முத்தரப்பு உறவுக்கு புத்துயிர் அளிப்பதற்கான பேச்சுகள் மீண்டும் துவங்கி உள்ளன.

அமெரிக்காவை எதிர்ப்பதற்கு இந்தியா, ரஷ்யாவின் உதவி தேவை என்பதால், முத்தரப்பு உறவை புதுப்பிக்கும் முயற்சிக்கு சீனாவும் தற்போது முழு ஆதரவு தெரிவித்துள்ளது. (ஐ)

## காசாவில் கிறிஸ்தவ தேவாலயம் மீது இஸ்ரேல் தாக்குதல்: 2 பேர் பலி



இஸ்ரேலுக்கும் காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் படையினருக்கும் இடையே 21 மாதங்களாக போர் நீடித்து வருகிறது. இந்நிலையில் காசாவில் உள்ள ஒரே கத்தோலிக்க தேவாலயம் மீது இஸ்ரேல் நேற்று வான்வழி தாக்குதல் நடத்தியது. இதில் திருச்சபையின் கரிட்டாஸ் வளாகத்துக்குள் பிரார்த்தனை செய்து கொண்டிருந்த ஒரு பெண்ணும், தேவாலயத்தின் துப்புரவு பணியாளரும் கொல்லப்பட்டனர். "இந்த தாக்குதல் பற்றி எங்களுக்கு தெரியும், தேவாலயம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் பற்றி விசாரணை நடத்தி வருகிறோம்" என இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. (ஐ)

## 3,000 மியான்மர் அகதிகள் மிசோரமில் இருந்து திரும்பினர்

மியான்மரில் தற்போது ராணுவ ஆட்சி நடக்கிறது. அங்கு உள்நாட்டு கிளர்ச்சிப் படை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது. இதனால், மியான்மரின் எல்லையையொட்டி அமைந்துள்ள வடகிழக்கு மாநிலமான மிசோரமில் ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக தஞ்சம் அடைந்தனர்.

இந்நிலையில், மியான்மர் அகதிகளின், 'பயோமெட்ரிக்' எனப்படும், விரல் ரேகை, கருவிழி பதிவு மக்கள் தொகை விபரங்களை சேகரிக்க மிசோரம் அரசு திட்டமிட்டுள்ளது.

இதனால் அச்சத்தில் இருந்த மியான்மர் அகதிகள், நாடு திரும்பத் துவங்கி உள்ளனர்.

குறிப்பாக ஜோகாவ்தர் கிராமத்தில் தஞ்சம் புகுந்த 2,923 அகதிகளும், வபாயில் தங்கியிருந்த 39 பேரும் தங்கள் கிராமங்களுக்கு திரும்பிஉள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மூன்று இளைஞர்களைப் பொலிஸார் சோதனையிட்ட போது , அவர்களிடம் இருந்து 90 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ள ன.

அதனையடுத்து மூவரையும் கைது செய்த பொலிஸார், அவர்களைக் குருநகர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## செம்மணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

இதன்போது அந்தக் கட்சியின் செயலாளர் அருள் ஜெயந்திரன் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

"இன்று தமிழர் பிரதேசங்களில் மனிதப் புதைகுழிகள் அதிகளவில் கண்டுபிடிக்கப்பட்டு அகழப்பட்டு என்புக்கூடுகள் நூற்றுக்கணக்கில் மீட்கப்பட்டு வருகின்றன.

இவை அனைத்தும் காணாமல் ஆக்கப்பட எமது உறவுகளின் உடலங்களின் எச்சங்களாகவே இருக்கும் என எண்ணத் தோன்றுகின்றது.

ஆனாலும், அவை எவற்றுக்கும் இதுவரை நியாயமோ - பரிகாரங்களோ கிடைக்கவில்லை. மாறாக இழுத்தடிப்புகளும் மறைப்புகளுமே இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, இலங்கை 1948 இல் சுதந்திரம் பெற்றது. இதைப் பிரித்தானிய அரசு வழங்கிய காலத்திலேயே தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையே அரசியல் இழுபறி இருந்து வந்தது.

ஆனாலும் , அதைப் பிரித்தானிய அரசோ அன்றி அன்றைய தமிழ்த் தலைவர்களோ கண்டுகொள்ளவில்லை.

அன்றைய தமிழ்த் தலைவர்களும் சிங்கள தேசம் வழங்கிய சலுகைகளுக்கு இசைவாகி கண்டுகொள்ளாதிருந்தனர்.

இந்நிலையில், இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலைக்கு உள்ளக விசாரணை ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாக இருக்கின்றது. அதேபோன்று சர்வதேச விசாரணையும் வலுவிழந்து கிடக்கின்றது.

அதன்படி தமிழ் மக்களின் உரிமைசார் அரசியல் பிரச்சினைக்குப் பிரித்தானிய அரசுதான் தீர்வை வழங்க வேண்டும்." - என்றார்.

## சந்திரசேனவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று வெள்ளிக்கிழமை காலை உத்தரவிட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எஸ்.எம் சந்திரசேன, 2015 ஜனாதிபதித் தேர்தலின் போது தனது அன்புக்குரியவர்களுக்கு 25 மில்லியன் ரூபா பெறுமதியான சோளங்களை வழங்கியமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் கடந்த ஜூன் மாதம் 4 ஆம் திகதி காலை முன்னிலையாகியிருந்த போது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மனு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிரிந்த மீன்பிடித் துறைமுகத்தில் மணல் அகழ்வும் திட்டத்தை கொரிய நிறுவனத்துக்கு ஒப்படைத்து அரசுக்கு 2.63 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக நட்டத்தை ஏற்படுத்தினார் எனக் கூறப்படும் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனுவெல கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து தன்னைக் கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன் பிணை மனு தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயம்

தெஹிவளை, ஜூலை 18

தெஹிவளை ரயில் நிலையத்துக்கு அருகில் இன்று வெள்ளிக்கிழமை காலை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரால் இந்தத் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹட்டன் நகரின் வர்த்தகம் நிலையம் ஒன்றில் தீ விபத்து!

ஹட்டன் நகரின் கிளை வீதியில் உள்ள காலணி வர்த்தகம் நிலையம் ஒன்றில் இன்று (18) தீ விபத்து ஏற்பட்டுள்ளது. குறித்த சம்பவம் பிற்பகல் 1:00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தீ விபத்து ஏற்பட்ட நேரத்தில் வர்த்தகம் நிலையம் மூடப்பட்டிருந்த காரணத்தினால் தீ வேகமாக பரவியதாக தெரிவிக்கப்படுகிறது.

ஹட்டன் டிக்கோயா நகர சபை தீயணைப்பு பிரிவின் அதிகாரிகள் தீ பரவலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தீ விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும், தீ விபத்துக்கான காரணம் இன்னும் தெரியவரவில்லை என்றும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்து தொடர்பிலான விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு பயணிகளுக்கு விமான நிலையத்தில் வைத்தே தற்காலிக சாரதி அனுமதி பத்திரம் வழங்க தீர்மானம்!

இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு பயணிகளுக்கு, விமான நிலையத்தில் வைத்தே தற்காலிக சாரதி அனுமதி பத்திரங்களை வழங்க போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த நடைமுறை ஒகஸ்ட் 3ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நடைமுறையை செயல்படுத்த கட்டுநாயக்க விமான நிலையத்தில் சிறப்பு கருமபீடம் ஒன்று அமைக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

தற்போதுள்ள விதிமுறைகளின்படி, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வெரஹெராவில் உள்ள மோட்டார் போக்குவரத்துத் துறை அலுவலகத்தில் தற்காலிக சாரதி உரிமத்தைப் பெற வேண்டும்.

எனினும் இந்த அனுமதி பத்திரத்திற்காக வெரஹெரவில் உள்ள மோட்டார் போக்குவரத்துத் துறை அலுவலகத்துக்குச் செல்ல வேண்டிய நிலை தொடர்பில் ஏற்படும் சிரமம் குறித்து எதிர்மறையான கருத்துகள் எழுந்ததைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காதலனால் கடத்தப்பட்ட பாடசாலை மாணவி

அப்புத்தளை, ஜூலை 18

15 வயதுடைய பாடசாலை மாணவியைக் கடத்தி அப்புத்தளை பகுதியில் வீடொன்றில் வைத்திருந்த இளைஞர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை இரவு லிந்துல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட மாணவி தலவாக்கலையில் உள்ள தோட்டமொன்றைச் சேர்ந்த தரம் 10 இல் கல்வி கற்பவர் ஆவார்.

இந்த மாணவி பேஸ்புக் மூலம் சந்தேகநபரான இளைஞருடன் காதல் வயப்பட்டுள்ளார். வீட்டை விட்டு வெளியேறி நானுஓயாவில் இளைஞரைச் சந்தித்து அவருடன் அப்புத்தளைக்கு ரயிலில் சென்றார் என்று விசாரணையில் மாணவி தெரிவித்துள்ளார்.

மாணவியின் தாயார் வெளிநாட்டில் வேலை செய்து வருவதாகவும், அவர் தந்தையின் பராமரிப்பில் வளர்ந்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மகளைக் காணவில்லை எனத் தந்தை லிந்துலை பொலிஸ் நிலையத்தில் அளித்த முறைப்பாட்டை அடுத்து, மாணவியின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாணவி மருத்துவ பரிசோதனைகளுக்காக நுவரெலியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# யாழுக்கு விஜயம் செய்துள்ள தென்னிந்திய பிரபல பாடகர் ஸ்ரீநிவாஸ்!

தென்னிந்திய பிரபல பாடகர் ஸ்ரீநிவாஸ் உள்ளிட்ட குழுவினர் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் ஊடாக இன்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நாளை இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் போக்குவரத்து வசதிகளுக்காக பேருந்து ஒன்றை கொள்வனவு செய்யும் நோக்கில் நிதி திரட்டும் விதமாக, யாழ் பல்கலை மருத்துவ பீட மாணவர்களினால் குறித்த இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சி ஒரு களியாட்ட நிகழ்வாக இல்லாமல், மருத்துவ பீட மாணவர்கள் மற்றும் மருத்துவ சமூகத்தை மேம்படுத்தும் நிகழ்வாக அமையும் என மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நிகழ்ச்சியில் பாடகர் ஸ்ரீநிவாஸ், ஜீவன், சரண்யா ஸ்ரீநிவாஸ், ஈழத்து பாடகி கில்மிசா, அக்சயா ஆகியோர் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீரில் மூழ்கி சிறுவன் மரணம்

அம்பாந்தோட்டை, ஜூலை 18

அம்பாந்தோட்டை - லுணுகம்வெஹெர நீர்த்தேக்கத்தில் நீராடிக் கொண்டிருந்த சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் திஸ்ஸமஹாராமை பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுவன் ஆவார்.

இந்தச் சிறுவன் மேலும் நான்கு சிறுவர்களுடன் இணைந்து லுணுகம்வெஹெர நீர்த்தேக்கத்தில் நீராடிக்கொண்டிருந்த போது திடீரென நீரில் மூழ்கியுள்ளார்.

இதனையடுத்து பிரதேசவாசிகள் இணைந்து சிறுவனைக் காப்பாற்றி லுணுகம்வெஹெர வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லுணுகம்வெஹெர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# போதைப்பொருட்களுடன் 3,283 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 18

நாடளாவிய ரீதியில் ஜூலை மாதம் 11 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருட்களுடன் 3 ஆயிரத்து 283 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன் 1006 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 1129 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 1039 பேரும், ஹேஷ் போதைப்பொருளுடன் 18 பேரும், கஞ்சா செடிகளுடன் 24 பேரும், போதை மாத்திரைகளுடன் 59 பேரும், சட்டவிரோத சிகரெட்டுகளுடன் 8 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# வவு/ உக்குளாங்குளத்தில் சீரற்ற மின் விநியோகம் செயலிழந்த பெறுமதியான மின் உபகரணங்கள்

வவுனியா, ஜூலை 18

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் கடந்த 24 மணிநேரத்துக்கு மேலாக மின்சாரம் கூடிக் குறைந்து சீரற்ற வகையில் செல்வதால் பல இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டு மின்சாரப் பொருட்கள் செயலிழந்து நாசமாகியுள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இது தொடர்பில் நேற்றில் இருந்து மின்சார சபைக்குப் பல முறை தெரியப்படுத்தியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் வவுனியா, உக்குளாங்குளம் பகுதிக்கான மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது. அதன் பின் மின் குறைந்து, கூடி சீரற்ற நிலையில் கிடைத்துள்ளது.

சீரற்ற மின் விநியோகம் காரணமாக வீட்டு பாவனையில் இருந்து குளிரூட்டிகள், மின்விசிறிகள், மின் குமிழ்கள், மோட்டர்கள், சார்ஜர்கள் எனப் பல மின் உபரணங்கள் செயலிழந்துள்ளதுடன், இது தொடர்பில் பலரும் மின்சார சபைக்குத் தெரியப்படுத்திய போதும் திருத்த வேலைக்கு வருவதாகக் கூறியுள்ளார்களே தவிர, 24 மணித்தியாலம் கடந்தும் திருத்தம் செய்யப்படவில்லை. இதனால் அப் பகுதி மக்களின் பல இலட்சம் பெறுமதியான மின் உபகரணப் பொருட்கள் செயலிழந்து, நட்டம் ஏற்பட்டுள்ளதுடன் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்துள்ளது.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.07.2025 வெளியிடப்பெற்றது.